★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

வேலை வாய்ப்பை அதிகரிக்க கைக்குத்தல் அரிசி உற்பத்தியாம்

'கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக கைக்குத்தல் அரிசி உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம்' என்று உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி மக்கள் சபையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கைக்குத்தல் அரிசி தயாரிப்பிற்காக சர்க்கார் வழங்கிவரும் பல்வேறு மானியக் கடன் உதவிகளையும் விளக்கிய அவர், 1953—

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: பங்குனி 24உ வெள்ளி (6—4—56) ★ ★ வெளியூர்: பங்குனி 25உ சனி (7—4—56) [இதழ் 252

திராவிடம் திட்டமிட்டு மட்டம் தட்டப்படுகிறது

புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்குவதிலும் தொல்லை!

மற்ற மாகாணங்களின் தேவைகளைத் தெரிந்த பின்னர்தான் உதவியாம்!

இறுதியில் உதவி மறுப்பதற்கோ இச்சமாதானம்?

பொறியியல் கல்லூரியைப் பறித்துக்கொள்ள உடந்தையாக இருந்தவர்கள் கோரிக்கை மதிக்கப்படுமா?

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு

தென்னாடு எத்துறையிலும் கிஞ்சிற்றேனும் முன்னேறுவதையும் டில்லி ஆதிபத்தியவாதிகள் அணுவளவும் விரும்பவில்லை என்பதுமட்டுமல்ல—முன்னேற்றத்திற்கான வழிவகைகளை அவர்கள் செய்யாது ஒழிந்து, இங்குள்ள மாநில சர்க்காரோ, மற்றவரோ ஏதேனும் முயற்சி மேற்கொண்டால் அந்த முயற்சியை முறித்து, திட்டத்தைத் தடுத்து, தங்கள் ஏகாதிபத்திய ஆட்சி நோக்கை வெளிக்காட்டி வருகின்றனர் என்பதற்கு தொடர்ந்த சான்றுகள் கிடைத்தவண்ணமுள்ளன.

பொறியியல் கல்லூரிகளில் திராவிடத்திற்கு டில்லி இழைத்த அநீதியினை நேற்றுக்கண்டோம். இன்று.....? இதோ, காணுங்கள்!

இரண்டாம் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் மேலும் இரண்டு புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்கவேண்டும் என்று கருதி, திட்டம் தீட்டி, அதற்கென ரூ 166 இலட்சமும் ஒதுக்கி வைத்துக்கொண்டு, சென்னை சர்க்கார் டில்லியிடம் அனுமதி கோரி 'காவடி' எடுத்தனராம்!

டில்லியோ, சென்னைத் திட்டத்தைப் பாதியாக வெட்டிய போது, இந்த புதிய மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டத்தையும் வெட்டிவிட்டதாம். வேதனையோடு எழும்பிய 'கேள்விக் கணை'களுக்குப் பதில் தரும்போது, சென்னை சட்டசபையில் சுகாதார அமைச்சர் ஷெட்டி இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

டில்லி, மருத்துவக் கல்லூரியின் தேவைகளை, அகில இந்திய அடிப்படையில் ஆராயப் போகிறதாம்; அந்த ஆராய்ச்சி முடிந்த பின்னர்தான் சென்னையின் திட்டத்தை அனுமதிப்பது பற்றி யோசிக்குமாம்!

டில்லியின் ஆராய்ச்சி என்ன முடிவைப் பெறும் என்பது நமக்குத் தெரிந்ததுதானே!

'ஆராய்ந்தோம்; அகில இந்திய அடிப்படையில் மொத்தமாக எட்டு கல்லூரிகள் தேவை எனக் கண்டோம்; அவை வடநாட்டு மாநிலங்களில் அமைவதே பொருத்தமானது என 'நிபுணர்'கள் கூறுகின்றனர்' என்பதுபோன்ற முடிவைத்தான் டில்லி தரப்போகிறது.

புதிய மருத்துவக் கல்லூரிகள் இரண்டு சென்னையில் அமையும் என்று எவரேனும், டில்லியை இத்தனை தெளிவாகக் கண்டபின்னும் நம்பினால், அது மிக மட்டரகமான பைத்தியக்காரத்தனமாகாதா?

திராவிடர் பழம் பெருமை

பிரிட்டிஷ் தூதுவர் விளக்கம்

பெங்களூர் ஏப். 5—

தென்னாட்டு மக்கள், நல்லொழுக்கம், அமைதி, நட்புள்ளம் ஆகிய பண்புகள் கொண்டவர்களாவர்.

நவீன இந்தியாவின் முன்னேற்றத்திற்கு, தென்னாடு மிக அதிகமாக உதவியுள்ளது.

டெல்லி, பழம்பெரும் வரலாற்றைக் கொண்டதுதான் என்றாலும், டெல்லியிலேயே தங்கி யிருப்பதின் மூலம் ஒருவர் இந்தியாவை முழுவதுமாகத் தெரிந்து கொள்ள முடியாது.

"தென்னாடு மிக முக்கியமானது; ஏனெனில், இந்தியக் கலை, கலாச்சாரம் இவற்றின் மிகத் தொன்மை வாய்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் தென்னாட்டவர்,"

என்று இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவரான மால்கம் மாக்டொனால்டு, பெங்களூர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டசபை முன்பு தடியடி

பாட்டியாலா, ஏப். 5—

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக் கோரி பெப்சு சட்டசபை முன்பு மறியல் செய்தவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததினால் சிலர் காயமுற்றனராம்.

'குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை'

திருப்பூர் தோழர்கள் வழக்கில் தீர்ப்பு

பிப். 20 அர்த்தாலையொட்டி கைது செய்யப்பட்ட தோழர்கள் பாலசுந்தரம், பழனிசாமி, முத்து, சுப்பையன் ஆகியோர் மீது போக்கு - வரத்துக்கு இடையூறு விளைவித்ததாகவும், சட்ட வரம்பை மீறியதாகவும் அரசியலார் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

பல்லடம் 'ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்'டில் வழக்கு நடைபெற்றது.

பல வாய்தாக்களுக்குப் பின்னர், இறுதியாக 30—3—56 அன்று வழக்கை விசாரித்து, 'போலீசார் சுமத்திய குற்றச்சாட்டுகள் எந்த வித ஆதாரமுமற்றவை' எனத் தீர்ப்பில் குறிப்பிட்டு, சப்-மாஜிஸ்திரேட், தோழர்கள் நால்வரையும் விடுதலை செய்தார்.

தோழர்கள் சார்பில் 'அட்வகேட்' சுப்பையன் அவர்கள் வழக்கை நடத்தினார்கள்.

பல்லடம் தி. மு. கழகத் தோழர் பொன்னுசாமி அவர்கள், விடுதலையானத் தோழர்களுக்கு தேனீர் விருந்தளித்தார். திருப்பூர் நகரச் செயலாளர் தோழர்களைப் பாராட்டிப் பேசி, பின்னர், திருப்பூர் அழைத்து வந்தார். (ந. பி.)

கழகம் கண்டு கவர்னர் கிலி!

ஆபத்து வளருவதாக ஓலம்

ஆராய்ச்சி நடத்த வேண்டுகோள்

அலட்சியம் வேண்டாமென உபதேசம்

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப்பிடிப்பிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள திராவிட மக்கள் கண்டுள்ள விடுதலைப் போர்ப்படை கண்டு, வடநாட்டு ஆதிபத்தியத்தின் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கும் சென்னை கவர்னர் பிரகாசா, எத்தனை அச்சம் கொண்டிருக்கிறார் என்பதை சில சில நேரங்களில் அவர் உதிர்க்கும் கருத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது

திராவிடர் இயக்கத்தின் மகத்தான வளர்ச்சி குறித்தும், அதன் நடவடிக்கைகளின் நோக்கம் குறித்தும், தனது வடநாட்டு சகாக்களுக்கு கவர்னர் பிரகாசா அவ்வப்போது தகவல் தந்து வருகிறாரல்லவா?

இப்போது சென்னையில் ஆராய்ச்சியாளர் கூட்டம் ஒன்றில் பேசும்போதும் திராவிடர் இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

'அவர்களை அலட்சியப்படுத்தாதீர்கள்; அலட்சியப்படுத்தினால், சீக்கிரமே, எங்கள் ஆதிபத்திய ஆசையில் மண் அள்ளிப் போட்டுவிடுவார்கள்' என்று ஓலமிட்டிருக்கிறார்; கிலி கொண்டு கதறியிருக்கிறார்.

"ஆரியர்—திராவிடர் பிரச்சினைகளைக்குறித்து ஆராய்ச்சி நடத்தவேண்டும்."

என்று, வேண்டுகோள் விடுத்திருக்கிறார், கவர்னர் பெருமான்!

திராவிடர் — ஆரியர் என்ற வேறுபாடு, ஒரு அருவருக்கத்தக்க பயங்கர உருவமாக நம் கண்முன் நிறுத்தப்படுகிறது. இம்மாதிரி வேறுபாடு செய்கிற சக்திகளை, அலட்சியம் செய்வது நல்லதல்ல."

"அந்த சக்திகளை சரிவர, இரக்கசிந்தையோடு புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்; இன்றேல், அந்த சக்திகள் ஆபத்தானவையாக உருவெடுக்கக்கூடும்.

"துவக்க காலத்தில் முஸ்லீம் லீக், மிக அற்பமான அளவு செல்வாக்குப் பெற்றதாகத்தான் இருந்தாலும், பின்னால் நாட்டையே துண்டாடக் கூடிய ஆற்றல் பெற்றதாக வளர்ந்துவிட்டது; நாடு துண்டாடப்பட்டது, மனித சமூக வரலாற்றில் மகத்தான தோர் அவல முடிவாகும்.

"திராவிடர்கள், ஆரியர்கள் என்று பிரித்துப் பேசும் சக்திகள், முக்கியமானவை அல்ல — அலட்சியப்படுத்தி விட வேண்டிய அளவு சிறியவைதான் என்று ஒதுக்கி விடுவோமேயானால், நாளா வட்டத்தில் அந்த சக்திகள் மீண்டும் இந்தியாவில் ஒரு பிரிவினையைச் சாதிக்கிற அளவு ஆபத்தான சக்திகளாக உருப்பெறக் கூடும்," என்றெல்லாம், கவர்னர் பிரகாசா ஒப்புவமை காட்டி ஓலமிட்டிருக்கிறார்.

'அலட்சியம் செய்யாதீர்! அவர்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து கூறுவீர்! ஆபத்து எதிர்நோக்குகிறது"

என்று, கதறியிருக்கிறார், அந்த வடநாட்டு ஆதிபத்தியக் காவலர்!

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் அபிவிருத்திக்காக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் சுமார் ரூ. 8·4 கோடி செலவு மதிப்புள்ள திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தெள்ளூர் தோழர்கள்மீது ஆட்சியாளர் வழக்கு

10 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்

சிறை மீண்ட தோழர்களுக்கு சிறப்பான வரவேற்பு

வடாற்காடு மாவட்டம் தெள்ளூர் கிராமத்தில், பிப். 20 அர்த்தாலையொட்டி நில அளவு அதிகாரியை தடுத்தனர் எனக் கூறி தோழர்கள் மு. தருமராசன், சாமிநாதன், கண்ணன், ஏழுமலை ஆகிய தோழர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணைக்குப் பின், தோழர்களுக்கு தலா 10 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தோழர்கள் இன்முகத்துடன் சிறைத் தண்டனையை ஏற்று, போளூர் சிறையில் 10 நாட்களைக் கழித்துவிட்டு 31—3—56 காலை 10-30 மணிக்கு விடுதலையடைந்தனர்.

சிறையாயிலில், போளூர் தி. மு. கழகத் தோழர்களால் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

அன்று பகல் தோழர் போளூர்-சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் விடுதலையடைந்த தோழர்கட்கு உணவு அளிக்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு, வீண்ணமங்கலம் ஆற்றுக் கரையிலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 6—4—'56 வெள்ளி

தமிழ்நாடு எனப் பெயரிடும் பிரச்சினை!

'மதராஸ்' என வழங்கப் பட்டுவரும் சென்னை இராஜ்யத் திற்கு, 'தமிழ் நாடு' எனப் பெயரிடவேண்டும் என்று, சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதே பெயர் மாற்றும் தீர்மானம் ஒன்றை மேல் சபையிலும் கொண்டுவரப்பட்டது.

சட்டசபையிலும், மேல் சபையிலும் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, முறையே நண்பர் விநாயகமும், முதியவர் கஜபதியார் அவர்களும், சாதுரியமாகப் பேசி, உறுப்பினர்களின் ஆதரவைக் கோரி இருக்கிறார்கள். அவர்கள் முறையிடு அனைத்தும், காங்கிரஸ் உறுப்பினர் செவிகளில் ஏறவில்லை. இரண்டு சபையிலும் தீர்மானம் தோற்றுவிட்டது.

மதராஸ் என்றப் பெயரை மாற்ற ஆட்சிப் பொறுப்பில் இருந்துவரும் காமராஜ்-சுப்பிரமணியம் அச்சு ஒருக்காலும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்பது, ஏற்கனவே உணரப்பட்டுள்ள உண்மையாகும். மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து நடக்கக்கூடாது என்பதே ஆட்சித் தத்துவத்தின் உள்ளடக்கம் எனத் தீர்மானித்து நடந்து வருகிற காங்கிரஸ் மேலிடத்தின் பிடிவாதத்தையும், அது கிரிய கோட்டை மீறாது நடந்து வருவதே வாழ்வு பெறும் வழியாகும் என்ற நம்பிக்கையில் செயல்பட்டு வருகிற சென்னை அமைச்சரவையின் கோழைத்தனத்தையும் தெளிவாகத் தெரிந்திருக்கிற எவரும், தமிழ் நாடு எனப் பெயரிடும்பிரச்சினையில் வெற்றி கிட்டாது என ஏற்கனவே உணர்ந்துகொண்டு இருப்பதில் ஆச்சரியமில்லை.

'மதராஸ்' என்றப் பெயரை மாற்றி, அதற்கு பதிலாகத் தமிழ் நாடு எனப் பெயரிடுவது, மனித சக்திக்கு அப்பாற்பட்டதல்ல. சட்டசபையில் பெரும்பான்மை பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி விரும்பினால், பெயர் மாற்றுவதை மிக எளிதில் நிறைவேற்றி இருக்கலாம்.

மனித ஆற்றலுக்கு உட்பட்ட பெயர் மாற்றுவது போன்ற ஒரு எளிதானப் பிரச்சினையிலும்கூட, காங்கிரஸ் கட்சி எத்தகையப் பிடிவாதத்தைக் காட்டுகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது, ஜனநாயகத் தத்துவப்படி, எதிர்க் கட்சிகளுக்குள்ள நியாயமான நீங்காக் கடமையாகும். இவ்வடிப்படையான கடமையைக்கூட செயல்படுத்துவதில் ஒரு எதிர்க்கட்சி தயக்கம் அல்லது பின்வாங்கிவிடுமானால், மக்கள் ஆட்சி முறையில், தன்னையும் ஒரு எதிர்க்கட்சி எனக்கூறிக் கொள்ளும் அருகதை, அந்தக் கட்சிக்கு இல்லாமலே தொலைந்துபோகும்.

ஆளும் கட்சிக்கு எதிராக மக்களை ஏவவேண்டும் என்பதற்காக, எதற்கெடுத்தாலும் ஆளும் கட்சியை 'எதிர்ப்பு—எதிர்ப்புக் காகவே' என்ற போக்கில் எதிர்த்துக்கொண்டு இருப்பது ஒரு எதிர்க் கட்சியின் பணி அல்ல. நடைமுறையில் இருந்துவரும் ஜனநாயகப் பண்பாட்டை ஒப்புக்கொள்ளாது, அம்முறையினால் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அம்மூல முறையையே அழித்துவிடத் தருணத்திற்காகக் காத்துக்கிடக்கும் ஒரு கட்சியின் அரசியல் பணியேயாகும் அது.

அனுபவ சாத்தியமற்ற ஒரு காரியத்தைக் கோரி, அதை எற்க ஆளும் கட்சி மறுக்கும் போது, அம்மறுப்பையே ஒரு காரணமாகக் கூறி, ஆளும் கட்சிக்கு எதிராக மக்களை ஏவமுயலுவது, ஜனநாயகமாகாது. எதிர்க்கட்சியின் அத்தகு போக்கைத்தான் கீழ்த்தரமான அரசியல் நோக்கம் எனக் கூறுவது பொருந்தும்.

ஆனால் காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கோ, எதிர்க்கட்சியினர், மக்களாட்சி முறை வரம்பைக் கடவாது, எந்த நியாயமான ஒன்றைக் கோரினாலும், அதையும் 'அரசியல் நோக்கம்' என்றே சொல்லி, ஏளனம் பேசி வருகிறார்கள். அதே மனோபாவத்தைத்தான் ஆளும் கட்சியான காங்கிரஸ், 'மதராஸ்' என்றப் பெயரை மாற்றி தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டும் எனக் கோரிய எதிர்க் கட்சியினரைப் பழித்துப் பேசி இருக்கிறது. எதிர்க் கட்சியினரைக் குறித்துக் காங்கிரஸ் கட்சி கொண்டிருக்கும் கருத்து, எதிர்கால ஜனநாயக வளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாகாது. நிற்க,

'மதராஸ்' என்றப் பெயரை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை, சட்டசபையில் எதிர்க் கட்சியினரால் கிளப்பப்பட்டிருந்த போதிலும், அக்கோரிக்கை காங்கிரஸ் கட்சிக்கும் உடன்பாடு உடையதேயாகும். உடன்பாடு இருக்கின்ற காரணத்தால்தான், இந்தியத் துணைக் கண்டத்தின் இப்பகுதியில் இயங்கும் காங்கிரஸ் கட்சியின் உறுப்புக்குக் 'தமிழ் நாடு காங்கிரஸ்' எனப் பெயரிடப்பட்டு இருக்கிறது. அன்று இடப்பட்டப் பெயரினாலேதான் இன்றும், இப்பகுதி மக்களைக் கொண்ட காங்கிரஸ் அழைக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

இப்பகுதி உறுப்பாக உள்ள காங்கிரஸ் கட்சிக்குப் பெயரிட்டபொழுது, எதைச் சான்றாகக்கொண்டு, 'தமிழ் நாடு' காங்கிரஸ் எனப் பெயரிடப்பட்டது என்பது ஆராயத்தக்கது. 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டும் எனக்கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய நிதி அமைச்சர் குளறிவழிந்ததுபோலவே, இப்பகுதி காங்கிரசிற்குப் பெயர் சூட்டியபொழுதும், மூவேந்தர் ஆண்ட ஒரு பகுதியாகத்தான் இருந்ததே அல்லாது, 'தமிழ்நாடு' என்றப் பொதுப் பெயரால் அழைக்கப்படவில்லை. 'தமிழ் நாடு' என்றப் பொதுப் பெயர், இப்பொழுதுபோலவே, அக்கால வரலாற்றிலும் இடம் பெற்று இருக்கவில்லை. தொன்மையான தமிழ் இலக்கியங்களிலும் இடம் பெற்று இருக்கவில்லை. எனவே, இலக்கியங்களிலும், வரலாற்றுச் சான்றுகளிலும் இடம் பெற்றில்லாத 'தமிழ் நாடு' என்ற ஒரு புதுமைப் பெயர், எந்தச் சான்றைக் கொண்டு வரையறுக்கப்பட்டது. அப்புதுமைப் பெயரை இப்பகுதி காங்கிரசிற்குச் சூட்டுவதுதான், இப்பகுதி காங்கிரசின் உள்ளடக்கத்தைத் துளியும் ஐயத்திற்கிடமின்றி விளக்கிக் காட்டக்கூடும் என்ற முடிவிற்கு, எந்த நியாயத்தைக் கொண்டு, அப்பெயர் இட்டவர்கள் வந்தனர்?

இதன் உண்மையைக் கண்டறிவதற்கு, அனைவருக்கும் உள்ள சராசரி அறிவே போதுமானதாகும். இதற்காக வெளி நாட்டிலிருந்து நிபுணர்களை எனப் பட்டம் தாங்கி உள்ளவர்களை, பெரும் பணச் செலவில் இறக்குமதி செய்து, ஆராயத் தேவையே இல்லை.

நூற்றுக்கு நூறு தமிழ் மக்களை மட்டுமே உள்ளடக்கிக் கொண்டு செயலாற்றி வருவதுதான் இப்பகுதி காங்கிரஸ் உறுப்பின் பணியாகும். எனவே, தமிழ் மக்களை மட்டுமே உள்ளடக்கமாகக்கொண்டு பணியாற்றி வரும் இப்பகுதி காங்கிரஸ் உறுப்பு, தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் இப்பகுதிக்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிட்டுக் கொண்டது. இப்பகுதி காங்கிரஸ் செயல்படுவதற்குரிய வரம்பை, தமிழ்மக்கள் வாழ்ந்து வரும் பகுதி அளவுடன் நிர்ணயித்துக்கொண்டது. எனவே, தமிழ் மக்கள் வாழும் இப்பகுதி 'தமிழ் நாடு' எனப் பெயர் சூட்டியது.

இப்பகுதி காங்கிரஸ் உறுப்புக்குப் பெயரிடப்பட்ட பொழுது, தமிழ் இலக்கியங்களில் இருக்கிறதா—வரலாற்று ஏடுகளிலே இருக்கிறதா—என்றெல்லாம் கிளப்பப்படாத கேள்வி, ஏற்படாத ஐயம், இப்பொழுது மட்டும், எதிர்க்கட்சியினர் கோரும் நிலையில், காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது! இந்தக் கோணல் புத்திக்கு எது காரணம் என்பதை தமிழ் மக்களே முடிவு கட்டிக்கொள்ளட்டும்

இப்பகுதி வாழும் மக்களின் தாய் மொழி தமிழ். அம்மொழியைக்கொண்டு அவர்கள் தமிழ் மாந்தர் என அழைக்கப்படுகின்றனர். எனவே, அவர்கள் வாழும் நிலப்பரப்புக்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடுவதுதான் இயற்கை நியதி!

இவ்வியற்கை ஏற்பாட்டை மறுத்துவிட்டது காங்கிரஸ் ஆட்சி! அவர்கள் பணி முடிந்து விட்டது. அவர்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டியது, இனி தமிழ் மக்கள் கையில்தான் இருக்கிறது.

கைத்தறி துணி விற்பனை

சென்னை, ஏப். 3—

'கைத்தறித் துணிகளைத் தெருக்களில் கொண்டுபோய் விற்பனை செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு சென்னை சர்க்கார் அண்மையில் உரிமை அளித்துள்ளனர்' என்று, சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கு மட்டுமே வேலைதரும் திட்டங்கள்

ரூ 24 கோடி செலவிட டெல்லி முடிவு

அகதிகளுக்கு மட்டுமே வேலை தரப்படும் என்ற தோக்கத்துடன் சுமார் 250 நடுத்தரத் தொழில்கள் துவங்கப்படும் என்று தெரிகிறது.

இந்தத் தொழில் திட்டங்களுக்கு, ரூ. 24 கோடிவரை செலவிடப்படுமாம்.

அகதி புனரமைப்பு இலாகா தயாரித்த இந்தத் திட்டங்களுக்கு, திட்டக் குழுவின் அங்கீகாரமும் கிடைத்து விட்டதாம்.

சுமார் 50,000 அகதிகள், பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்தவர்கள், இம்மாதிரி தொழில் திட்டங்களில் வேலை பெறும் வாய்ப்புடையவர்களாகின்றனர்.

இந்தத் தொழில்களைத் துவங்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கு திட்டத்திற்காகும் செலவில் பாதியை, இயந்திர சாதனங்கள் முதலியன வாங்குவதற்காகக் கடனாக டெல்லி சர்க்கார் கொடுத்து உதவுமாம்.

அத்துடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இடம், தொழிற் சாலைக்குத் தேவையான மின்சாரம், நீர் முதலியவை எல்லாம் பெற்றுத் தருவதிலும் டெல்லி சர்க்கார் துணைபுரியும் என்றும் தெரியவருகிறது

இந்தத் தொழிற்சாலைகளில் அகதிகளல்லாதோரை வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்படும்.

மற்றும், தொழில் நுணுக்கம் கற்றவர் மட்டுமே வேலை செய்ய முடியும் என்பது போன்ற பணிகளுக்கும் அகதிகளே நியமிக்கப் படவேண்டும் என்பதால், அந்தத் தொழில் நுணுக்கப் பயிற்சி, அகதிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் நிபந்தனை இருக்குமாம்.

அமைகிற தொழிற்சாலைகள் அகதி முகாம்களுக்கு அருகிலேயே அமைய வேண்டுமென்பதும் மற்றொரு நிபந்தனையாகுமாம்.

அர்த்தால் நடத்துவது சரியல்லவாம்!

குறைகளைத் தெரிவிக்க வேறு வழி நாடவேண்டுமாம்

சொந்த ஊர் மக்களுக்கு நேரு பண்டிதர் உபதேசம்

"விற்பனை வரி விதிப்பதற்கான காரணங்கள் என்னவென்று எனக்குத் தெரியாது. அதனால், அதுபற்றிய தகராறில் கருத்தறிவிக்க முடியாதவனாயிருக்கிறேன். ஆனால், இந்த வியாபாரத்தில் வியாபாரிகளுக்கு ஏதேனும் துயரங்கள் இருக்குமானால் அவற்றை எடுத்துக் கூற அர்த்தால் செய்வது சரியான முறையல்ல; தங்கள் குறைகளை வேறு நியாயமான வழிகளில் மாநில சர்க்காரிடம் கூறலாம். அர்த்தால் மக்களுக்குத் தொந்தரவையும், வியாபாரிகளுக்கு நஷ்டத்தையும் தரக்கூடியதாகும்!"

என்று, பிரதமர் நேரு, தமது சொந்த நகரமான அலகாபாத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உணவுப் பொருள், மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பை எதிர்த்து உத்தர பிரதேச மாநிலமெங்கும் அலகாபாத் நகர் உட்பட அண்மையில் நடத்திக் காட்டப்பட்ட அர்த்தாலைக் குறித்தே பண்டிதர் இந்தக் கருத்தை அறிவித்திருக்கிறார்.

வடக்கே செல்லும் தென்னிட்டின் சங்கு!

ஏலம் விடும் பிரச்சினை பரிசீலிக்கப்படுகிறதாம்

சென்னை, ஏப். 3—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் சங்கு குளிப்பது தனிப்பட்டவரிடம் விடப்பட்டுள்ளது. ஜமீன் பகுதியில் செய்யப்பட்ட இந்த ஏற்பாடு 1956 ஜூன்வரை இருக்கும். பின்னர், இதை ஏலத்திற்கு விடுவதா, அரசினர் இலாகாவே கவனிப்பதா என்பது பரிசீலிக்கப்படுகிறது சர்க்கார்இலாகாவே நடத்துவது இலாபகரமானதாகத் தெரியவில்லை," என்று, சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தொழில் அமைச்சர் எம். பக்தவத்சலம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இங்குள்ள சங்குகள் மேற்கு வங்கத்திற்கு வளையல்கள் செய்ய அனுப்பப்படுகிறதென்றும், அங்குள்ள பெண்கள் இந்த வளையல்களை அணிந்துகொள்வதாகவும், குடிசைத் தொழிலாக வளையல் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை கூட இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவ முயற்சிக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

யோசிக்கப்படுமாம்!

சென்னை, ஏப். 4—

"மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலய 'டிரஸ்டி'யாக தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதி நியமிக்கப்பட்டிருக்கிறாரா?" என்ற கேள்விக்கு, பதிலளிக்கையில் அமைச்சர், இப்போது உள்ள ஆலயத் திட்ட அமைப்பை மாற்றினால் இது சாத்தியமென்றும், அம்மாற்றத்தை கவனிக்கும்போது இதுபற்றி யோசிக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

குற்றம் கூறப்படும் சர்க்கார் ஊழியர்

பெயர் காரக்க நீதிமன்றம் செல்லவேண்டும்

பத்திரிகைகளில் குற்றம் சாட்டப்படும்—அவதூறு கூறப்படும் சர்க்கார் ஊழியர்கள், தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதை நீதிமன்றம் மூலமாக, நிரூபித்துக் கொள்ளவேண்டும் என்ற திட்டக் குழுவின் சிபாரிசை டில்லி சர்க்கார், கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

இது குறித்து சீக்கிரமே உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாக, வழக்குகளில் நிறுத்தப்படும் சர்க்கார் ஊழியர்கள் மீது, சர்க்காரின் இலாகாபூர்வமான நடவடிக்கை, நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்புக் கிடைக்கும் வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கும் என்பது முன்னைய ஏற்பாடு.

இதன் விளைவாக, அத்தகு வழக்குகளில் ஈடுபடுத்தப்படும் சர்க்கார் ஊழியர்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் நீண்ட காலத்திற்கு வழக்கை நடத்த 'படி' தர வேண்டியிருக்கிறது.

இந்தக் கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக, புலன் விசாரணையின் போதே போதுமான ஆதாரங்கள் கிடைக்குமானால், இலாகாபூர்வமான விசாரணையை முடித்துக் கொண்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்ற டில்லி சர்க்காரின் உள்நாட்டிலாகா புதிய உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்றும் தெரியவருகிறது.

இந்தியாவில், நிலக்கரி உற்பத்தி, 1954-ம் ஆண்டில் 3688 இலட்சம் டன்களை இருந்தது, 1955-ல் 3822 இலட்சம் டன்களைப் பெருகி விட்டது.

மெள்ள மெள்ளத் தாள் திறக்கிறது!

முன் குரல் கேட்கிறது! பின் குரல் கிளம்புகிறது!

ஞாயிறு எழுகிறது! மடைமைப் பனி மறைகிறது!

திங்கள் முகிழ்க்கிறது! கூம்பிய அல்லி பல்லிளிக்கிறது!

மாஸ்கோவைப் பின்பற்றி ஸ்டாலின் போக்கை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி குறை கூறுகிறது

"தனி மனிதரின் ஆதிக்கமென்பது கார்ல் மார்க்ஸ் கொள்கைக்கும், லெனின் வகுத்த நெறிக்கும் மாறுபட்டதென்று மாஸ்கோ மாநாடு அறிவித்துள்ளது. இப்படி முடிவு செய்ததின் மூலம் உலகப் பொதுவுடமை இயக்கத்திற்கே சோவியத் பொதுவுடமைக் கட்சி பெரும் நன்மை புரிந்திருக்கிறது. ஸ்டாலின் பிற்கால ஆட்சியில் வளர்ச்சிபெற்ற சர்வாதிகாரக் கொள்கையால் எத்தனை தவறுகள் நேர்ந்தன என்பதையும், எவ்வளவு நாசம் விளைந்துள்ளது என்பதையும் மாஸ்கோ மாநாடு சுட்டிக்காட்டியிருக்கிறது. தனி மனிதரின் ஆதிக்கப் போக்கு கட்சியின் பணியையே அற்பமாக்கி வந்திருக்கிறது.

"லெனினுடைய கொள்கை நெறியையும், கட்சியின் தலைமை கூட்டுப் பொறுப்பு அடிப்படையில் அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் மாஸ்கோ மாநாடு வலியுறுத்தியுள்ளது. இதன் மூலம் பொதுவுடமைக் கட்சியின் திறனும், முயற்சியும் வலுப்பெறுவதற்கு மாஸ்கோ மாநாடு சிறந்த நன்மை புரிந்திருக்கிறது"

—என்று, புதுடில்லியில் 4 நாட்களாக நடைபெற்ற இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறிப்பிடுகிறது.

அக்குழு நிறைவேற்றியுள்ள மற்றும் பல தீர்மானங்கள் குறிப்பிடுவதாவது :—

"சோவியத் பொதுவுடைமைக் கட்சி மாநாட்டின் முடிவுகள், ஒவ்வொரு நாட்டிலும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன; அம்முடிவுகள் உலகின் எதிர்கால வரலாற்றையே மாற்றியமைக்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தன."

"அமைதிச் சக்தியும், சோசலிச சக்தியும் வெற்றி பெற்று வரும் சூழ்நிலையில் சோவியத் பொதுவுடைமைக் கட்சி மாநாடு கூடியது. உலகில் அமைதி நிலவுமாறு செய்யவும், சோசலிசக் கொள்கை பரவவும் ருசியா பெரும்பணி ஆற்றியுள்ளது. சோசலிச சமுதாய அமைப்பை விட பொதுவுடைமைச் சமுதாய அமைப்பே சிறந்ததென்று மாஸ்கோ மாநாடு திட்டவட்டமாகக் கூறியுள்ளது. உலகில் தொழிலாளர் இயக்கம் வலுப்பெற்று வருவது பற்றியும், உழைக்கும் தொழிலாளரிடையே முன்னேற்றக் கருத்துக்கள் பரவி வருவது சம்பந்தமாகவும் மாஸ்கோ மாநாடு பிரகடனம் செய்திருக்கிறது.

"சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் வன்முறைப் புரட்சியோ அல்லது உள்நாட்டுப் போரோ ஏற்படவேண்டிய தேவையில்லை. அமைதியான முறைகளின் மூலமே சோசலிச சமுதாய அமைப்பு உறுப்பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் இப்பொழுது பல நாடுகளில் காணப்படுகின்றன. இந்த நிலை தத்துவ ரீதியாகவும், நடைமுறைக் கொள்கை அடிப்படையிலும் பெருத்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

"இந்த நிலையால் சோசலிசத்தின் எதிரிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்; ஏனெனில், வன்முறை நடவடிக்கைகளில் நம்பிக்கையுடையவர்களே பொதுவுடைமையர் என்று அவர்கள் தவறான பிரச்சாரம் செய்து வருகிறார்கள்" என்று அத்தீர்மானம் குறிப்பிடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

சமூதாய அபிவிருத்தித் திட்டங்களில், 1952 அக்டோபர் முதல் 1955 செப்டம்பர் வரையில் கிராமாந்தர மக்கள் ரொக்கம், சாதனம் உழைப்பு ஆகியவைகளின் மூலம் அளித்துள்ள உதவியின் மதிப்பு ரூ. 18,70,00,000 என்றும் சர்க்காரின் பங்கு ரூ. 31,03,00.000 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1956 பிப்ரவரி இறுதிவரையில் சமூதாய முன்னேற்றத் திட்டங்கள், தேசீய விரிவுத் திட்டங்கள் ஆகியவைகளில் மொத்தம் 1,140 தொகுதிகள் இருக்கின்றனவாம்; அவை 1,24,957 கிராமங்களுக்கு வியாபிக்கின்றனவாம்; 811 இலட்சம் மக்கள் அவைகளால் பலனடைகிறார்களாம்!

மொத்தம் 9,95,000 ஏக்கரா நிலம் மீட்கப்பட்டு, 15,57,000 ஏக்கரா நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதாம்!

கல்வி, சமூகக் கல்வி ஆகிய துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது; சமூதாய அபிவிருத்தித் திட்டங்களில் 12,000 புதிய பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன; 4,358 சாதாரனப் பள்ளிகள் ஆதாரப் பள்ளிக்கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன; 1955 செப்டம்பர் இறுதியில் 6,05,000 முதியோர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்; 30,000 நிலையங்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது,' என்றுகூறப்பட்டிருக்கிறது

இந்தியா, 1955-ம் ஆண்டில், மொத்தம் சுமார் 551 38 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 98,787 டன் அரிசியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது.

தானாகக் குடிசை அமைத்ததற்கு அகமகிழ்ந்தான்!

பாராட்டுதலைப் பெற சாதனையை முகமலர மொழிந்தான்

பாராட்ட வேண்டிய பிரதமர் 'குடிசையைக் கொளுத்துவேன்' என்று இலட்சியம் பேசினார்!

டில்லியில் சுமார் 3 இலட்சம் மக்கள் சேரியில் வாழ்கிறார்கள்!

இந்தச் சேரிப் பகுதிகள், 'மனிதர்கள் வாழ்வதற்கே தகுதியற்றவை' என, டில்லி நகரசபை அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டவையாகும்.

பிரதமர் நேரு, திடீரென இந்தச் சேரி பகுதிகளைப் பார்வையிட வந்தார். பூடா வாசல் பகுதியிலுள்ள சேரிகளின் சொந்தக்காரர் நேருவிடம் வந்து, மிகவும் பெருமிதமாக, அங்கிருந்த சேரிகளைச் சுட்டிக்காட்டி, 'இந்த வீடுகளை நான்தான் கட்டினேன்' என்று கூறினார்; உடனே நேருவுக்கு ஆத்திரம் வந்துவிட்டதாம்; அவர் கூறினாராம்—

"இந்தக் குடிசைகளையெல்லாம் நீங்கள் கட்டியதாகக் கூறுகிறீர்கள்; இவைகளையெல்லாம், அடையாளந் தெரியாமல் கொளுத்திவிட வேண்டும். என்பது என்னுடைய கருத்தாகும்; இப்பகுதி முழுவதையும் பரந்த மைதானமாக ஆக்கிவிட வேண்டும்."

சுமார் 2 மணி நேரம் அந்தச் சேரிப் பகுதிகளை நேரு சுற்றிப் பார்க்கையில், திறந்த சாக்கடைகள் ஓடக்கூடிய குறுகிய சந்துக்கள் வழியாகவெல்லாம் சென்றாராம்; சில சந்துக்கள் மிகக் குறுகியவைகளாக இருந்ததால், 'கியூ' வரிசையில் அவைகள் வழியாகச் செல்லவேண்டியிருந்ததாம்!

அங்கு ஒரு சேரியில் கிழவர் ஒருவர், 'டில்லியிலுள்ள ஏழைகளிலெல்லாம் ஏழைகள் நாங்கள்; எங்களுடைய குடிசைகளை நேரு காணவந்தது, எங்களுடைய பெரும்பேறு ஆகும். எங்களுடைய நிலையை உயர்த்த ஏதாவது செய்யப்படும் என்று நம்புகிறோம்' என்று கூறியுள்ளார்.

முற்காலத்தில் கட்டியவையும், தற்போது இடிந்து நொறுங்கி விழக்கூடிய நிலையில் இருப்பவையுமான வளைவுகள் வழியாக நேரு சென்றுள்ளார்.

மண்ணால் கோணலாகக் கட்டப்பட்ட சுவர்கள், வைக்கோல், தகரம், தோல், கந்தைகள், சாக்கு ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஓட்டைக் கூரைகள் ஆகியவற்றை நேரு கண்டபோது, அவர் முகம் சுருங்கிவிட்டதாம்!

6 அடி அகலமும், 10 அடி நீளமும் உள்ள ஒரு அறையை ஒரு சேரிவாசி நேருவிடம் சுட்டிக்காட்டி, 'இந்த நிலச் சொந்தக்காரர் இதற்காக மாதந்தோறும் ரூ. 15 வேண்டுமெனக் கேட்கிறார்; நான், மாதத்தில் இத்தொகையைக்கூடச் சம்பாதிப்பதில்லை, என்று கூறியுள்ளார்.

தரை மட்டத்துக்கு 5 அல்லது 10 அடிக்குக்கீழே மண்ணால் கட்டப்பட்ட குடிசைகளும், கால் நடைகளும் — மனிதர்களும் சேர்ந்துவாழும் சேரிகளும் நேருவுக்குக் காட்டப்பட்டன.

"நான்கு சுவர்களுக்குள் ஷாஜகான் கட்டிய டில்லி நகரம், 60,000 மக்கள் வாழ்வதற்காக நிர்மானிக்கப்பட்டது; இன்று அங்கு வாழும் மக்கள் தொகை 6-இலட்சமாகும்; இந்தச் சுவர்களுக்குள்ளேயே பல சேரிகளும் இருந்தன,"

என்று பாரத் சேவா சமாசத்தின் பள்ளி விவரங்கள் கூறுகின்றன.

சேரிவாழ் மக்கள் நிலை

தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமாம்

சென்னை, ஏப் 4—

"சேரிவாழ் மக்களின் நிலை உயர்ந்து நல்ல இடத்தில் வாழ வழிவகை செய்வதே அரசியலாரின் இலட்சியம்; சேரிகளைக் கொளுத்த வேண்டுமென்று நேரு அண்மையில் கூறினதின் நோக்கமும் இதுதான்,"

என்று, சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பி பரமேசுவரன் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"இது தவிர, சேரிவாழ்வோருக்கு மாற்று இடங்களைத் தரவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. இதற்கெனத் தனித் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசாங்க உதவி கோரப்பட்டுள்ளது அது கிடைத்ததும் தீவிரமான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

விரிவான அளவில் சமூக பாதுகாப்புச் சட்டம்

இயற்றப்படுமென அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 4—

இதுவரை சரிவர இயற்றப்படாத சமூக பாதுகாப்புச் சட்டங்களுக்குப் பதிலாக மாநில நல இலட்சியத்திற்கேற்ப விரிவான சமூக பாதுகாப்புச் சட்டம் இயற்றப்படும் என்றும், இச்சட்டத்தை நிபுணர்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்தியத் தொழிலாளர் இலாகா அமைச்சர் கந்துபாய் தேசாய் சூசகமாகத் தெரிவித்தாராம்.

தொழிலாளர்களும், முதலாளிகளும் பூசலை விட்டொழித்து சமூகத்தின் க்ஷேம நலனுக்காக உற்பத்தியைப் பெருக்கும் பொது நல சேவையில் ஒன்றுசேர வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்.

கிராமாந்தரங்களில்

தாய்—சேய் நல நிலையங்கள்

கிராமாந்தரங்களில் சுகாதார சேவை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய சர்க்கார் வகுத்துள்ள ஒரு திட்டத்தின் படி பல மாநிலங்களிலுமுள்ள பின்னடைந்த கிராமாந்தரப் பிரதேசங்களில் பெருமளவுக்கு தாய்-சேய் நல நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்; மொத்தம் 200 நிலையங்கள் ஏற்படுத்தப்பட விருக்கின்றனவாம்; அவை ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துணை நிலையங்கள் இருக்குமாம்; சுமார் 60,000 மக்கள் அதனால் பலன் பெறுவார்களாம்; மொத்தம் இத்திட்டத்தின் மூலம், 120 இலட்சம் கிராமாந்தர மக்கள் பயனடைவார்களாம்!

இந்த நிலையங்களுக்காக இந்திய சர்க்கார் முழு மூலதனச் செலவையும் (ஒவ்வொரு நிலையத்துக்கு ரூ. 2,000 வீதம்) நடைமுதல் செலவில் ஒரு பகுதியையும் தர ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம்; வருடாந்தர நடைமுதல் செலவு ரூ. 17,270 என்று மதிப்பிடப்படுகிறது. அதை மாநில சர்க்கார்களும் சேர்ந்து பொறுப்பேற்பார்களாம்.

இரண்டாவது வருட இறுதியில் பணம் பொறுப்பு முழுவதும் மாநில சர்க்கார்கள் ஏற்கவேண்டியதுதானாம்!

திருச்சியில் தி. மு. க. மாநில மாநாடு

மே திங்கள் 17, 18, 19, 20-ம் தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக இரண்டாவது மாநிலமாநாட்டின் ஏற்பாடுகள் துவக்கப்பட்டு விட்டன.

மார்ச் 29-ந் தேதியன்று அண்ணா அவர்கள், தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்களுடன் திருச்சி வந்து சேர்ந்தார்கள். 31-3-56 அன்று பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் திருச்சி வந்து சேர்ந்தனர். வரவேற்புத் தலைவர் அம்பில் தர்மலிங்கம், செயலாளர்கள் எம். எஸ். மணி, எஸ். முத்து, விளம்பரக் குழு உறுப்பினர் ஜி. பராங்குசம் உள்ளிட்ட உள்ளூர் தோழர்களும், மாநாடு நடைபெறவிருக்கும் 'ரேஸ் கோர்ஸ்' திடலுக்குச் சென்று பார்வையிட்டதுடன், பந்தல் அமைப்பு, தண்ணீர் வசதி, போக்கு-வரத்துச் சாதனங்கள் ஆகியவைகளைப் பற்றி கவனித்து முடிவு செய்தனர். 2-4-56 அன்று தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் திருச்சி வந்து உடனிருந்து மாநாட்டின் துவக்கப் பணியில் கலந்துகொண்டார்.

மாநாட்டுப் பந்தல் திருச்சி ஜங்ஷனிலிருந்து ஆறு பர்லாங் தொலைவிலேயே ('ரேஸ் கோர்ஸ்' திடல்—ஜமால் முகம்மது கல்லூரி அருகில்) அமைக்கப்படுகிறது.

மொத்தத்தில் 2,000 அடி நீளமும், 1,000 அடி அகலமும் கொண்ட அளவில் மாநாட்டுப் பந்தல் அமையப் பெறுவதுடன், உணவு விடுதிக்கென மாநாட்டையொட்டி தனிப் பந்தல்கள் அமையும். அத்துடன், மாநாட்டின் நிகழ்ச்சிகளுக்கென்று அமைக்கப்படும் பந்தலையொட்டி கலை அரங்குக்கென தனியாக மேடையும், இடமும் அமையும்.

குளிப்பதற்கும், குடிப்பதற்கும், 'பம்பு' செட்டுகளின் உதவியால் வேண்டிய அளவுக்கு வசதி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது.

அஞ்சல் நிலையமும் மாநாட்டு பந்தலில் தனியாக நிறுவுவதற்கு அஞ்சல் நிலைய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கிறது.

இரயில் போக்கு-வரத்து, பஸ் வசதிகளுக்கும் ஆவன செய்ய வரவேற்புக் குழுவினர் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தென்னாட்டின் முக்கிய நகரங்களிலும், மற்றும், பம்பாய், ஆமதாபாத், இலங்கை போன்ற இடங்களிலும் மாநாட்டின் விளம்பரங்களைச் (சினிமா 'சிலைடு' மூலம்) செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாநாட்டின் முதல் அறிக்கையாக இருவண்ணச் சுவரொட்டிகளும், துண்டுத் தாள்களும், எல்லாக் கிளைகளுக்கும், தி. மு. கழகத் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பட்டு வருகிறது.

திருச்சி நகரிலுள்ள ஆற்றல் மிக்க தோழர்கள் வரவேற்புக் குழுவினரால், தொண்டர் படையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, திக்கெட்டுமுள்ள திராவிடப் பெருங்குடி மக்களே! திருச்சி நோக்கிப் புறப்பட இப்போதிருந்தே உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுவீராக!

—மாநில மாநாடு
விளம்பரக் குழு.

தோட்டத் தொழிலாளர் பட்டினிப் போர்

மேலும் பலர் ஈடுபடுகின்றனர்

குன்னூர், ஏப் 4—பட்டினிப் போரில் ஈடுபட்டுள்ள நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக மேலும் பல தொழிலாளர்கள் பட்டினிப் போரில் பங்கு பெற்று வருகின்றனர்.

1955-ம் ஆண்டிற்கு நிர்வாகிகளால் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமான 'போனஸ்' தரப்பட வேண்டும் என்பதற்காகத் தொழிலாளர்கள், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில் சர்க்கார், தொழிலாளர் பிரதிநிதிகளையும், நிர்வாகிகளையும் அழைத்து, தகராறுக்கு முடிவு காண முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

தடையுத்தரவை மீறிய 60 பேர் கைது!

பம்பாய், ஏப். 5—தடையுத்தரவை மீறி கூட்டம் கூடி ஆர்ப்பாட்டம் செய்ததாகப் பம்பாயில், சுமார் 60 பேர் வரை கைதாகியுள்ளனராம்.

பகல் 1-30 மணி முதல் 3 மணிக் குள்ளாக, ஆறு பிரிவினராக, வந்து கூட்டம் கூடி, ஒலிமுழக்கம் செய்ததாக, 43 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். எழாவது பிரிவாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்திய 13 பேர்கள் மாலை 6-மணி அளவில் கைதாகினர் என்றும் தெரிய வருகிறது.

திருச்சி மாநாடு:

திருச்சி நகரத் தொண்டர்கட்கு:

"மே 17, 18, 19, 20-ந் தேதிகளில், திருச்சியில், தி. மு. கழக மாநிலமாநாடு நடைபெற இருக்கும் பந்தயத் திடலை (ஜமால் முகமது கல்லூரி பக்கம்), சுத்தம் செய்து செப்பனிட தொண்டர் படைத் தலைவர் தோழர் ஐ. எம். ஷெரீப் அவர்கள் முன்னின்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுசமயம், திருச்சி நகரில் உள்ள தி. மு. கழகத் தொண்டர்கள் அனைவரும் 8-4-56 ஞாயிறு மாலை 3 மணியளவில் மேற்படி திடலுக்கு வந்து சேர வேண்டுகிறேம்,"

என்று, மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளர் அறிவிக்கிறார்.

தொழில் கல்வி வகுப்புகள்

1956 மே மாதம் 1-ம் தேதி முதல் ஜூன் மாதம் 9-ம் தேதிவரை ஆடோமொபைல் சர்விஸ் என்சினீயரிங், ரேடியோ சர்விஸ் என்சினீயரிங், பெரிய கடிகாரம் செய்தல் ஆகிய, ஆறு வார வகுப்புகள் நடத்தப்படும். ஒரு சில மாணவிகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். பிராஸ் பக்டசுக்கு I. L. W. A. Ltd., கோபால் பாக், கோயமுத்தூர் என்று எழுதவும்.

போன்: 40
தந்தி: "ILWA"

G. D. NAIDU,
பிரசிடெண்ட்

திராவிடத்தின் கண்டனத்திற்கு டெல்லி தரும் திமிரான பதில்!

நான்காவது உருக்குத் தொழிற்சாலையும் வடநாட்டில்தானும்!

காமராசர்—சுப்பிரமணியம் அச்சு என்ன செய்யப்போகிறது?

வடநாட்டில் தொழில் பெருகவேண்டும்—வடநாடு தன் நிறைவு பெற வேண்டும்—என்பது மட்டுமல்ல, டெல்லி ஏகாதிபத்திய வாதிகளின் நோக்கம்! மாறுக, தொழில் வளம் பெருகும் வடநாட்டில் உற்பத்தியாகும் பொருள்களில் தேவைக்குப் போக மிகுவனவற்றிற்கு நிரந்தரமானதொரு 'மார்க்கெட்' வேண்டுமல்லவா? அதற்காக, தென்னாட்டைத் தொழில் துறையில் என்றென்றைக்கும் பின்தங்கிய நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதிலும் டெல்லி ஆதிபத்தியவாதிகளுக்குத் தவிர்க்க முடியாத அக்கறை இயற்கையாகவே இருக்கிறது என்பதைத்தான், துவங்கப்படும் எந்த ஒரு பெரிய—சிறிய தொழிலும், வடநாட்டு எல்லைக்குள்ளேயே அமையவேண்டும் என்ற அவர்களின் நடைமுறை நமக்குச் சொல்கிறது.

ஏற்கனவே இருப்பதுபோக, தங்களுக்குக் கிடைத்த ஆதிபத்திய உரிமையின் வினாவாக வடநாட்டவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் துவங்கப்பட்ட எல்லா பெரிய தொழில்களும் வடநாட்டு எல்லைக்குள்தானே!

முன்று புதிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் துவங்க, டெல்லி நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு நிர்மாணித்து வருகின்றது.

பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் என்ற வடநாட்டுச் சிற்றூர்கள் பெரும் தொழில் நகரங்களாக உருவம் பெற்று வருகின்றன, அந்தத் திட்டத்தால்!

இப்போது நான்காவது இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்போகிறார்களாம்; அதுவும் வடநாட்டில்தான்! பிகார் மாநிலத்தில் அது இடம் பெறுமாம்!

சேலத்திலோ, அல்லது மற்ற தென்னாட்டில் இரும்புக் கனி கிடைக்கும் பகுதிகளிலோ அந்தத் தொழிற்சாலை இல்லை.

டெல்லி மக்கள் சபையில் உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி, 'நான்காவது உருக்குத் தொழிற்சாலை போகாரா என்ற இடத்தில் பிகார் மாநிலத்தில் அமையும்' என்று தெரிவித்திருக்கிறார்.

தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது — அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது—என்று கண்டனக் குரல் வலுவடைந்து வருகிற அதே நேரத்தில், டெல்லி ஏகாதிபத்தியம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை, தென்னாட்டு ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் ஊன்றிக் கவனித்தாகவேண்டும்.

8 கோடி பவுன் செலவில்!

உருக்குத் தொழிற்சாலை

மேற்கு வங்கத்திலுள்ள துர்க்காபூரில் 8 கோடி பவுன் செலவில் மிகப்பெரிய உருக்குத் தொழிற் சாலையை பிரிட்டிஷ் நிறுவனங்கள் கட்டித் தருமாம்!

இத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யப்படுமாம். பின்னால் இந்த உற்பத்தி சக்தியை இருமடங்காகப் பெருக்குவதற்கும் வசதி இருக்குமாம்.

தென்னூர் தோழர்கள்...

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

தோழர்கள் நால்வரும் மேளவாத்தியங்கள் முழங்க தென்னூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தென்னூரில் தோழர்களின் வருகையை யொட்டி ஒரு மைல் தூரத்திற்குத் தோரணங்களும், வரவேற்புத் தட்டிகளும் கட்டப்பட்டிருந்தன. கழகத்தின் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாலை 6 மணியளவில் தோழர் போளூர் - கணபதி தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் போளூர்-சுப்பிரமணியம், ஆரணி - கன்னையன், வேலூர் - கருத்தோவியன், திருமணி, கண்ணன் ஆகியோர் சிறை சென்று மீண்டதோழர்களைப் பாராட்டிப் பேசினர்.

தோழர்கள் மு. தருமராசன், சாமிநாதன், கண்ணன், ஏழுமலை ஆகிய நால்வரும் தம் நன்றியைத் தெரிவித்தனர்.

மனிலால் காந்தி மறைவு

காந்தியாரின் இரண்டாவது புதல்வரான மணிலால் காந்தி, ஆப்பிரிக்காவில் டர்பன் நகரில் உள்ள தனது இல்லத்தில் நேற்று இயற்கை எய்தினர் என்ற சோகச் செய்தி இன்று கிடைத்திருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் இன வெறியை எதிர்த்து நீண்டகாலமாகப் போராடி வந்தவர், சமீபகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்ததாகத் தெரிகிறது அவரது மறைவு தென்னாப்பிரிக்க வெள்ளையரல்லாதாருக்கு மகத்தான நஷ்டமாகும்.

கழகக் கூட்டம்

★

திருநள்ளாறு:
தேரடியில்
8—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
காரை-ப. அ. கரீம்
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

சேலம் — 16-வது வட்டம்:
எண் 2, வ. கு. ச. தெருவில்
(பட்டை சோவிலுக்கு அருகில்)
8—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
கே. ஆர். மாசிலாமணி
பேசுவோர்:
ஜி. முத்துகிருஷ்ணன்
சிற்றரசி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். ஏ. அன்புக்கரசு
எஸ். சி. ஆறுமுகம்

★

மு. தூரக்குடி:
(இராமநாதபுரம் மாவட்டம்)
கச்சேரி மைதானம்
தி. மு. கழகத் துவக்க விழா
8—4—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
குப்பான்அம்பலம்
பேசுவோர்:
மு. வசனப்பித்தன்
கே. எஸ். சந்தானம்
என். எஸ். இராசா

பெங்களூர் மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம்

"பெங்களூர் மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம் 8—4—56 மாலை 4 மணிக்கு பிளாக் பள்ளி (சிவாஜி நகர்) தி. மு. கழக மனையில் நடைபெறும். அதுபோது, தி. மு. கழக மாநில மாநாடு, 'தீச்சுடர்' நிதி உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்தநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில், 7—4—56 பிற்பகல் 2-30 மணியளவில், சென்னை, முத்துக் கிருஷ்ணன் தெரு, எண் 15 இல்லத்தில், திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை-சிவமுத்து 'கண்ணோட்டம் என்பது குறித்துப் பேசுவார்.

வடசென்னை குறள்நெறிக் கழகம்

7—4—56 மாலை 6-30 மணியளவில், கழக அறையில் தோழர் ஆர். எல். விக்கராசன் தலைமையில் 'இலக்கியத்தின் இன்பம்' என்ற பொருள் பற்றி ப. கோ. வீரராகவன், இரா. பாலு பேசுவர்.

8—4—56 மாலை 2-30 மணிக்கு புலவர் கி. நியாகரர்சன் குறள் வகுப்பு நடத்துவார்.

ஓவியக் கண்காட்சியும் — பரிசளிப்பு விழாவும்

சென்னை மாணவர் மன்றச் சார்பில், 8—4—56 காலை 10 மணியளவில், சென்னை—பெத்தநாய்க்கன் பேட்டை, அம்மன்கோயில் தெருவில் உள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் ஓவியக் கண்காட்சி நடைபெறும். திரு. டி. சண்முகம் (பின்னை) எம்.எல்.ஏ. அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைப்பார். பிற்பகல் 4 மணியளவில் சென்னை நகராண்மைக் கழக ஆணையாளர் திரு. என். சங்கரன் தலைமையில் பரிசு பெற்ற மாணவ—மாணவியர்க்குப் பரிசு வழங்கப்படும். அதுபோது, திருவாளர்கள் கே. இராமதாஸ் எம்.சி., சி. என். மீனாட்சிசுந்தரம் (முதலியார்) ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

'அழுது' இதழ் துவக்க விழா

சென்னை — திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம், நூல் நிலையம், இலவச வாசகசாலையில், தோழர் நீலாராயணன் தலைமையில், தோழர் கா. அப்பாதுரை அவர்கள் துவக்கி வைப்பார். தோழர்கள் இளம்பரிதி, எம். கே. மணி, மா. பா. சாரதி, செல்லக் கபிலன் ஆகியோர் பேசுவர்.

குறிப்பு: தேதி குறிப்பிடப்படவில்லை.

சூளைநகர இளைஞர் கழகம்

7—4—56 மாலை 6-30 மணிக்கு எண் 10, மாணிக்கச்செட்டி தெரு, கழக மனையில், தோழர் இரா. சக்ரவர்த்தி தலைமையில் 'பெண்களுக்குப் போலீஸ் வேலை தகுமா?' என்பது பற்றிச் சொற்போர் நடைபெறும். பலர் பேசுவர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

7-4-56 மாலை 7-மணிக்கு, சென்னை-கொருக்கையம்பதி, எண் 15, காசப்ப நாயகன் தெரு, கழகப் பணிமனையில், தோழர் மீனம்-வெங்கடேசலு தலைமையில், 'கடவுளும்-மதங்களும்' என்னும் பொருள் பற்றி கழகத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

8—4—56 காலை 10 மணியளவில் கோவை 29-வது வட்டார அழகிரி கிளைவு படிப்பக சொற்பயிற்சி மன்றச் சார்பில், 'கடவுள்' எனும் தலைப்பின்கீழ் பலர் பேசுவர்.

* * *

8—4—56 காலை 10 மணியளவில், பெரம்பூர், பந்தர்தோட்டம், 3-வது தெரு, எண் 3/4 இல்லத்தில், வள்ளுவர் இளைஞர் மன்ற உறுப்பினர்களால் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'தாய் மொழி' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

வேலை வாய்ப்பை அதிக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

55-ம் ஆண்டில், 207 6 இலட்சம் டன்னாக இருந்த கைக் குத்தல் அரிசி உற்பத்தி, 1954-55-ம் ஆண்டில் 182·4 இலட்சம் டன்னாக குறைந்து விட்டது என்றும் தகவல் தந்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. எடிட்டர்: இரா. செழியன் எம்.ஏ.

ரூ. 50 கோடியில் கனரக மின்சார உற்பத்திச்சாலை

போப்பாலில் நிறுவுவதென முடிவாம்!

போப்பால், ஏப். 5—கனரக மின்சார சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை போப்பாலிலேயே நிறுவுவதென இந்திய பேரரசினர் இறுதியாக முடிவு செய்துள்ளனர் என்று போப்பால் வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தொழிற்சாலை ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இதற்காகும் செலவு ரூ. 50 கோடி என்றும், தொழில் நுணுக்க உதவிக்காக இருபிரபல பிரிட்டிஷ் 'கம்பெனி'களுடன் ஒப்பந்தம் செய்துள்ளனரென்றும் செய்திகள் மூலம் தெரியவருகிறது.